# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 09, 2023

Weekly E-paper ● September 09, 2023




## கொலைகாரக் கூட்டம் தலை வெட்டப் போகிறதாம்!

சுப. வீரபாண்டியன்

## ‘இந்தியா’ பயம்! ‘பாரத்’ குழப்பம்!

எழில்.இளங்கோவன்

## உதயநிதியல்ல, ‘இந்தியா’தான்!

தலையங்கம்

## ஒரே நாடு ஒரே தேர்தலா? நடக்கும், ஆனா நடக்காது!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● செப்டம்பர் 09, 2023 Weekly E-paper ● September 09, 2023


# கொலைகாரக் கூட்டம் தலை வெட்டப் போகிறதாம்!

**சுப. வீரபாண்டியன்**

வன்முறையில் பிறந்து, வன்முறையில் வளர்ந்து, வன்முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் காவிக் கூட்டம், கழகத்தின் இளைய தலைவன் உதயநிதி தலைக்கு விலை வைத்திருக்கிறது!

சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் உதயநிதி, சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியது மாபெரும் குற்றமாம். ஒழிப்பு மாநாட்டில் சனாதனம் வாழ வேண்டும் என்றா பேச முடியும்?

உதயநிதியின் மீது இவ்வளவு கோபப்படுகிறவர்கள், அவர் தலையை வெட்டிக் கொண்டு வந்தால் 10 கோடி தருவோம் என்று பகடி செய்கிறார்கள்.

இவர்களுக்கு தேர்தலின் மீதும், ஆட்சி அதிகாரத்தின் மீதும்தான் பற்றுதல்! எனவே உதயநிதியைக் குறிவைத்து இந்துக்களின் வாக்குகளைத் தாங்கள் பெற்று விடலாம் என்று நினைக்கிறார்கள்!

கலவரங்களில் வெறிகொண்டு அலையும் காவிக் கூட்டம், இரண்டு செய்திகளைப் புரிந்து கொள்ள வேண்டும்! ஒன்று, அமைச்சர் உதயநிதி தாமாக விரும்பி முடி திருத்தும் கடைக்குப் போனாலன்றி, அவருடைய தலை முடியைக் கூட அவர்களால் வெட்ட முடியாது! இரண்டு, என்னதான் இந்துக்கள் இந்துக்கள் என்று அவர்கள் கூச்சலிட்டாலும், பக்தியும் மதமும் வேறு, அரசியல் வேறு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள் தமிழ் மக்கள்!



கோயிலுக்குப் போவார்கள், காவடி எடுப்பார்கள், மத விழாக்களைக் கொண்டாடுவார்கள். ஆனால் தேர்தல் வந்தால், உதயசூரியனுக்குத்தான் வாக்களிப்பார்கள்! எத்தனை காலமானாலும் இங்கு உதயசூரியன்தான் உதிக்கும், ஒரு நாளும் தாமரை மலராது!



சென்ற வாரம்தான், முதன்முதலாக எதிர்நீச்சல் தொடர் நாடக நடிகர் மாரிமுத்துவைச் சந்தித்தேன். அதுவே கடைசிச் சந்திப்பாகவும் ஆகிவிட்டது. இன்று காலை மாரடைப்பால் அவர் இறந்து போய்விட்டார் என்னும் செய்தி பெரும் அதிர்ச்சியைத் தருகிறது. நடிகர், இயக்குனர், பகுத்தறிவாளர், எழுத்தாளர் மாரிமுத்துவுக்கு என் இறுதி வணக்கம்!

# ‘இந்தியா’ பயம்! ‘பாரத்’ குழப்பம்!

எழில்.இளங்கோவன்

ஆட்சியின் காலம் முடியப் போகும் நேரத்தில், குறிப்பாக 2024 பொதுத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் பா.ஜ.கவும், பிரதமர் மோடியும் குழப்பத்தில் இருப்பது தெரிகிறது.

அரசியலமைப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல், எதிர்க் கட்சிகளிடம் பேசாமல், நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல் திடீரென்று ‘President of Bharat ‘ என்று ஜி20 உச்சி மாநாடு தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் விருந்து அழைப்பிதழில் அச்சிட்டு இருக்கிறது மோடி அரசு.

சில நாள்களுக்கு முன்னர் ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் “நாம் இனிமேல் நம் நாட்டை பாரத் என்று தான் சொல்ல வேண்டும். இந்தியா என்று சொல்லக் கூடாது” என்று நாக்பூரில் பேசினார்.




படம்: நன்றி - தினமலர்

அடுத்த சில நாள்களில் அவசர அவசரமாக இந்தியா என்ற பெயரை பாரத் என்று மாற்றி குடியரசுத் தலைவரின் தேநீர் விருந்து அழைப்பிதழை அரசு வெளியிடுகிறது.

அப்படியானால் இது இந்தியாவா? பாரத்தா?

வேதத்தில், புராணங்களில் இந்நாட்டைக் குறிப்பிட்டு இது இந்தியா அல்லது பாரத் ( பாரதம்) என்ற பெயர்கள் எங்கும் காணவில்லை.

துஷ்யந்தன் சகுந்தலைக்குப் பிறந்த மகன் பரதன் ஆண்ட நாடு ‘குருநாடு’, பாரத நாடு இல்லை.

தம்பி பரதன், தன் அண்ணன் இராமனை நெஞ்சில் ஏந்தி ஆட்சி செய்த நாடு கோசலம், தலைநகர் அயோத்தி, அது பாரத நாடு இல்லை. புராண, இதிகாசங்களின் படி பரதர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஆண்ட நாடு பாரத் அல்லது பாரதம் என்பதற்கு சான்று இருப்பதாகத் தெரியவில்லை.

முகமது கோரி கி.பி.1100 ஆம் ஆண்டை ஒட்டிப் படையெடுத்தபோது அவர் ‘சிந்து’ என்ற நதியைக் கடந்து வந்தார். அரபு - ஈரானிய மொழியில் ‘சி’ என்ற ஒலி ‘இ’ என்று மாறுவதால் சிந்து நதி என்பது இந்து நதி என்று மாறி அதுவே இந்தியா என்று மாறிவிட்டதாகச் சிலர் சொல்கிறார்கள். இச்சொல் நேரடியாக இந்தியாவைக் குறிப்பதாக இல்லை.

ஆனால் கிருஸ்து பிறப்பதற்கு முன் அதாவது கி.மு.302 ஆம் ஆண்டு சந்திரகுப்தன் அரசவைக்கு வந்து, 6 ஆண்டுகள் தங்கி, கி.மு. 296 ஆம் ஆண்டு கிரேக்கம் திருப்பினார் செல்யூக்கஸ் நிகேடரின் தூதுவர் மெகஸ்தனிஸ்.

இந்த 6 ஆண்டுகளில் இந்தியாவைப் பற்றி அவர் எழுதிய நூலின் பெயர் ‘இண்டிகா’. இது சிந்து நதியாகிய ‘இண்டஸ்’ நதியின் கிரேக்க உச்சரிப்பு. ‘இண்டிகா’ என்ற பெயரை பௌத்தத்துடன் இணைத்துப் பாகியான் எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கே இண்டிகா என்பது இந்தியாவைக் குறிக்கும்.

இது வரலாற்றுச் செய்தி.

இப்பொழுது இந்தியாவா, பாரத்தா என்ற கேள்விக்கு இங்கு இடமில்லை. காரணம் நம் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 1 என்பது “இந்தியா அதாவது பாரத் ( பாரதம்) மாநிலங்களின் கூட்டமைப்பாக இருக்கும் “ என்று கூறுகிறது. எனவே இந்தியா என்றும் பாரத் என்றும் அழைக்கலாம்.

இந்தியாவை ‘பாரத்’ என்றுதான் அழைக்க வேண்டும் என்று 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்த நீதிபதிகள் டி.எஸ்.தாகூர், யு.யு. லலித் அமர்வும், அதே போன்று 2020 ஆம் ஆண்டு தொடுத்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.பாப்பே அமர்வும் சட்டப் பிரிவு 1 இன் படி இந்தியா - பாரத் என்று எப்படியும் அழைக்கலாம் என்று மனுக்களைக் தள்ளுபடி செய்தனர்.

இந்த முடிவு 1949 ஆம் ஆண்டு விவாதம் நடத்தி அம்பேத்கரால் எடுக்கப்பட்ட முடிவு.

இவைகளை எல்லாம் கணக்கில் எடுக்காமல் திடீரென்று பிரதமர் மோடி இந்தியா என்ற பெயரை இருட்டடிப்பு செய்ய முயல்கிறார் என்றால் ‘I.N.D.I.A என்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணி தான் அவருக்கும் சங்கிகளுக்கும் புளியைக் கரைத்து விட்டது.

முதலில் கூட்டணி சேராது என்றும், சேர்ந்தால் ஒன்றாய் இருக்க மாட்டார்கள் என்றும் சொல்லித் திரிந்த அவர்கள், வேற்றுமையில் ஒற்றுமை என்ற இந்திய ஒன்றியத்தின் பண்பாட்டைக் கூட்டணியிலும் நடைமுறைப்படுத்தி, இந்தியா கூட்டணி களம் கண்டு நிற்பதைப் பார்த்து மிரளுகிறார் மோடி.

‘இந்தியா’ என்ற எதிர் கட்சிகளின் பெயரைப் பார்த்து ‘இந்தியா’ என்ற நாட்டின் பெயரையே மறைக்க முயலுகிறார் என்றால், அவருக்குத் தேர்தல் பயம் வந்துவிட்டது என்பது தெளிவாகிறது.

இப்பொழுது ஒன்றிய அமைச்சர் அனுராக் தாகூர் சொல்கிறார் இந்தியா என்ற பெயரை நீக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று.

இதுவே இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு அறிகுறி.

ஆனாலும் 2024 இல் பா.ஜ.கவை வீட்டுக்கு அனுப்புவதில் மக்கள் சோர்ந்து விடக்கூடாது. ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## உதயநிதியல்ல, 'இந்தியா'தான்!

அண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் சனாதனம் பற்றிய கருத்துக்கு வலதுசாரிகள், சங்கிகள் என்று எல்லோரும் சூடுபட்டப் பூனையைப் போலத் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

"பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர், பெண் இனத்துக்கு எதிரான சனாதன கோட்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்றுதான் அமைச்சர் பேசினாரே தவிர எந்த மதத்தையும் மத நம்பிக்கைகளையும் புண்படுத்தும் வகையில் பேசவில்லை," என்று அமைச்சர் உதயநிதி பேசியது குறித்து விளக்கம் அளித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆனாலும் இதை இனப்படுகொலையைத் தூண்டுவதாக மடைமாற்றி பா.ஜ.க பொய்களை அவிழ்த்து விட்டார்கள்.

உதயநிதி இனப்படுகொலை பற்றிப் பேசுகிறார் என்று (பொய்) சொல்லும் கனவான்கள், பிரதமர் பேசாமல் இருந்ததாலேயே மணிப்பூர் பற்றி எரிந்ததே! அதற்கு என்ன சொல்வார்கள்?

பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிறப்பின் அடிப்படையில் சொல்லும் வருணம், வருணத்தின் அடிப்படையில் சொல்லும் குலத்தொழில், பெண்களின் மீது திணிக்கப்படும் ஆதிக்கம் இவையெல்லாம் சனாதனத்தில் தானே அடங்குகிறது.

சனாதனத்திற்கு எதிராக ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே, தந்தை பெரியார், அம்பேத்கர், நாராயண குரு போன்றோர் எல்லாம் போராடி இருக்கிறார்கள் என்பது வரலாறு.

உண்மையில் 'இந்தியா' என்ற பலமான எதிர்க்கட்சியைக் கண்டு பயம். அதில் விரிசலை ஏற்படுத்திட முடியாதா என்ற வயிற்றுப் பொறுமலின் வெளிப்பாடுதான், உதயநிதியின் மேல் பா.ஜ.க வின் பாய்ச்சல்.

சாமியார் என்பவர் அடக்கமானவர், பொறுமையானவர், நிதானமாகப் பேசுபவர், அன்பானவர், கோபப்படாதவர் என்று தானே சொல்லப்படுகிறார்.

அப்படியிருக்கும் போது தலையைக் கொண்டு வந்தால்10 கோடி என்று வன்முறை பேசும் சாமியாரைப் பற்றி காவிகள் ஒன்றுமே பேசவில்லை, பிரதமரும் ஏன் வாய் திறக்கவில்லை?

அவர்களுக்குச் சனாதனம் என்பது பேச்சு. 'இந்தியா' கூட்டணி என்றால் கலக்கம். விசயம் அவ்வளவுதான்! ●

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**

தொலைபேசி: 044-2472 6408



குலத்தொழிலை ஊக்கப்படுத்தும் இந்திய ஒன்றிய அரசின் விஸ்வகர்மா யோஜனா திட்டத்திற்கு எதிராக சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அருகில் 06-09-2023 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆசிரியர் கி.வீரமணி தலைமையில் ஆ.இராசா, கே.எஸ்.அழகிரி, கே.பாலகிருஷ்னன், இரா.முத்தரசன், பேராசிரியர் ஜவாகிருல்லா, பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தொல்.திருமாவளவன், கலி.பூங்குன்றன், பிரின்ஸ் கஜேந்திர பாபு உள்ளிட்டோருடைய கண்டன உரையுடன், திரளான தோழர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# ஒரே நாடு ஒரே தேர்தலா? நடக்கும், ஆனா நடக்காது!

**சாரதாதேவி**

பாரதிய ஜனதா கட்சி, தனக்கு 2019 இல் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தனிப் பெரும்பான்மை இனி எப்போதும் கிடைக்கப் போவதில்லை என்பதில் தெளிவடைந்து விட்டதாகத் தெரிகிறது. இந்த அறுதிப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி இந்தப் பதவிக்காலத்திலேயே அதிபர், பேரரசுக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் முயற்சியே இந்த "ஒரே நாடு ஒரே தேர்தல்". இதன் நடைமுறையை ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழுவை ஒன்றிய அரசு கடந்த சனிக்கிழமை அறிவித்திருக்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்றால் இந்தியா நாடும் அல்ல, நாட்டுக்குத் தேர்தலும் அல்ல, அது மாநிலங்கள் மற்றும் ஒன்றிய அரசுகளுக்கு நடத்தப்படும் தேர்தல் மட்டுமே எனும்போது, அந்த சொல்லாடலே தவறானது எனச் சுட்டுகிறார் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜம்குறை கிருஷ்ணன்.

பல மாநிலங்களின் கூட்டரசாகவே அரசியலமைப்புச் சட்டத்தால் வரையறுக்கப் பட்டிருக்கும் இந்திய ஒன்றியம், தேர்தலை ஒருமித்தோ, ஒரே நேரத்திலோ நடத்துவது சாத்தியமே இல்லை என்றும், அந்த வாதமே அபத்தமானது என்றும் சொல்கிறார் 'மின்னம்பலம்' இணையதளத்தில் தன் சிறப்புக் கட்டுரையில் அவர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் அமைக்கப் பட்டிருக்கும் குழு கடந்த ஜூன் மாதமே தன் வேலைகளைத் தொடங்கியிருப்பது இப்போது தெரியவருகிறது.

ஜனாதிபதியாகப் பதவிக்காலம் முடிந்த பின்னர், ராம்நாத் கோவிந்த் மட்டும் சுறுசுறுப்பாக இந்த வேலைகளைச் செய்ய பணியமர்த்தப் பட்டிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். தலைவர் முதல் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் வரை பல அரசு, அரசியல் தலைவர்களை அவர் சந்தித்து இதற்கான ஆலோசனைகளைக் கேட்டு, உருவாக்கத்தில் முக்கிய நிலையை அடைந்த பின்பே மோடி அரசு செப்டம்பர் மாதம் 18 முதல் 22 வரை ஒரு சிறப்பு பாராளுமன்றக் கூட்டத் தொடருக்கு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

I.N.D.I.A கூட்டணி சார்பில் சோனியா காந்தி, சிறப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரல்கள் என்ன என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கோரி 06-09-2023 அன்று கடிதம் எழுதி உள்ளார். ஒரு பக்கம் இந்தியா எனும் பெயரை பாரத் என மாற்றப் போவதாகவும், மறுபக்கம் ஒரே தேர்தல் எனவும் செய்திகளை உலாவ விட்டிருக்கிறார்கள், இதில் ஏதோ ஒன்றை நிச்சயம் தங்கள் மிருக பலத்தைக் கொண்டு அவர்கள் நிறைவேற்றத் துடிக்கிறார்கள் என்றே தெரிகிறது.

வெவ்வேறு மாநிலங்களில், வெவ்வேறு காலங்களில் நடக்கும் தேர்தல்கள் என்னும் நிலையிலாவது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் தங்கள் மக்களின் எதிர்காலத் திட்டங்களையும், போக்குகளையும் மீளாய்வு செய்யவும், திரும்பப் பெறவும், குறைக்கவுமான வாய்ப்புகள் உருவாகின்றன. அதையும் ஒன்றாக்கிவிட்டால், மக்கள் ஒரு சிறு இடைவெளியுமில்லாது இவர்களது தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எளிய மக்களை அஞ்ச வைத்துள்ளது இவர்கள் எடுத்திருக்கும் இந்த ஆயுதம்.

எப்பேர்ப்பட்ட கொடுங் கோன்மைக்கும் மானுட வரலாறு முடிவுகள் எழுதியே வந்திருக்கிறது. இந்துத்துவ பாசிச பா.ஜ.க. அரசின் கொடுங்கோன்மைக்கும் விரைவில் முடிவு எழுதப்படும். அது தெற்கிலிருந்து தொடங்கும்! கொசுவைப் போல, கொரோனவைப் .போல, டெங்குவைப் போல, நிரந்தரத்திற்கு ஆசைப்படும் சனாதன வாதிகளுக்கும் இது பொருந்தும். ●







அமைச்சர் உதயநிதிக்குக் கொலை மிரட்டல் விடுத்த சாமியாரைக் கைது செய்யக்கோரி சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் 08-09-2023 அன்று கண்டன உரையாற்றுகிறார் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian